



<u>நகர் ஊரமைப்பு துறை</u> (DTCP)

<u>நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்</u>

<u>புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம்</u>

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், தாளம்பாடி ஊராட்சி / கிராமம், ச.எண்- 209/2A9C -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான மனைகள் அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லாத பகுதி)

அளவு : 1 : 600

இணையதள விண்ணப்ப எண் : **1IWRQNUL / 32451 / 2024 - NKL**

## I.குறிப்பு :

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | : 0.9383 ஏக்கர் (அ)3799.00 ச.மீ | |
| கோரிய மனைகள் | : 11 | |
| ஒதுக்கிய மனைகள் | : 11 | |
| மனைப்பிரிவு எல்லை | ---------------------- | (red) |
| நிலையில் உள்ள சாலை | ---------------------- | (yellow) |

## II.பொது ஒதுக்கீடு :

(உத்தேச சாலை பரப்பளவு நீங்கலாக மீதமுள்ள மனைப்பிரிவு பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது)

**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கபட்டவை:**

உத்தேச சாலைகள் (ம) மூலை மடக்குகளின் பரப்பளவு = 792.85 ச.மீ.
தான பத்திர எண் - ( 3990 /2024)

**பொது உபயோகம் TNCDBR 47(8) ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்ட 1% ஒதுக்கீடு:**

I. உள்ளாட்சிக்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு = 17.76 ச.மீ (0.59%)
தான பத்திர எண் - ( 3990 /2024)

II. TANGEDCO ககான்ன ஒதுக்கீட்டின் பரப்பளவு = 16.03 ச.மீ (0.53%)
தான பத்திர எண் - ( 3991 /2024)

திறவெளிகள் - ( அரசாணை எண் -18 நகராட்சி நிஹர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 04-02-2019-ன் படி அரசு வழிகாட்டி மதிப்பின்படி தொகையை செலுத்தப்பட்டுள்ளது )

மூலை மடக்கு : (12.00 மீ) அகல சாலை வரை 1.50மீ x 1.50மீ விடப்படல் வேண்டும்

## III.நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. அரசாணை எண் 181 ஊரக வளர்ச்சி துறை நாள் 19.12.2020 -ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்தியில் உள்ளது எனச் சான்றளித்துள்ளதன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலகைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், அல்லது மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் / ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைப்பட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பெரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம்-குத்தகை பத்திரம்-பட்டா-தானப்பத்திரம்-பொது அதிகார பத்திரம் மெலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமைக்கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்டிகாள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லதக்கதல்ல.
8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் மமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே POWER LINE, HT LINE, LT LINE AND TELEPHONE LINE ஆகியன செல்லமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
11. உத்தேச மனைப்பிரிவில் எவ்வித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்தறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
12. உத்தரவு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் (ம) மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.
13. அரசாணை எண் 18 (ம) 16 ந.நி (ம) கு.வ.து நாள் 04-02-2019 (ம) 31-01-2020 -ன் விதிகள் அனைத்தும் பொறுந்தும்.

**ம.வ/மா.ந.ஊ.அ (NKL) SWP எண் - 260 / 2024**

ச.பிரபுசங்கர்
அளவர் / உதவி வரைவாளர்

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Namakkal
Date:2024.10.07 13:58:52

...ந்திரன்
வரை...ர் நிலை - III

மு.தேன்மொழி
மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை - II

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்.